RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 36 | பிப்ரவரி.12 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “ஊழல் கறை படிந்தவர்களை ஒன்று சேர்த்து தேர்தலை சந்திக்கிறது என்டிஏ” : முதல்வர் ஸ்டாலின்

சென்னை: பிப்.12-

“மத்திய பாஜக அரசு தமிழகத்துக்கு பட்ஜெட்டில் தந்தது ‘ஜீரோ’தான். இப்போது, என்டிஏ கூட்டணிக்கு அதே ஜீரோவை மக்களும் திருப்பித் தர போகிறார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஊழல் கறை படிந்த அத்தனை பேரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு, பொய்களை பரப்பிகொண்டு, தேர்தலை சந்திக்க வருகிறார்கள்” என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘இந்தியா டுடே’ சார்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில், “தமிழ்நாட்டு மக்களின் மனதில் என்ன இருக்கிறது என்று இந்தியா டுடேவும் சிவோட்டர்ஸ் நிறுவனமும் நடத்திய சர்வேயில் திமுக கூட்டணி 45 சதவீதம் ஆதரவோடு லீடிங்கில் இருக்கிறது.

எங்களுக்கும், இரண்டாம் இடத்துக்கும் இருக்கக் கூடிய வித்தியாசத்தைப் பார்த்தீர்கள் என்றால், 12 சதவீதம். இங்கே பத்திரிகையாளர்கள், அரசியல் ஆர்வலர்கள் என்று பலரும் இருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும், மூன்று சதவீதம் வித்தியாசம் இருந்தாலே கிளீன் ஸ்வீப்தான். 12 சதவீதம் என்றால், அது நிச்சயம் மிகப் பெரிய வெற்றிதான். அதில் எந்த மாற்றமும் இருக்காது. அதற்கென்று, நாங்கள் மெத்தனமாக இருக்க மாட்டோம்.

உங்களைப் பொறுத்தவரைக்கும், இந்த சர்வே ரிசல்ட், எங்களுக்கான பூஸ்ட். அவ்வளவுதான். ஏனென்றால், தி.மு.க. என்பது, எப்போதும், என்றென்றும், மக்களுடன் இருக்கக்கூடிய இயக்கம். மக்களுக்காக பாடுபடக்கூடிய இயக்கம். அதனால், இன்னும் உற்சாகமாக உழைத்து, உங்களுடைய கணிப்பை உண்மையாக்குவோம்.

கடந்த ஐந்த ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு என்ன நிலைமையில் இருந்தது என்று இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். அதேசமயம், இப்போது திராவிட மாடல் அரசு அமைந்து இந்த ஐந்து ஆண்டுகளில் வரலாறு காணாத வெற்றிப் பாதையில் தமிழ்நாடு வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது! வரும் தேர்தலில் வென்று, இந்த வளர்ச்சிப் பயணத்தை வெற்றிப் பயணத்தை திராவிட மாடல் 2.0விலும் தொடர்வோம்.

ஊடக நண்பர்கள் மற்றும் அரசியல் பார்வையாளர்களான உங்கள் முன்பு சில புள்ளிவிவரங்களை நான் முன்வைக்கிறேன். தமிழ்நாட்டின் கடந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதம். இந்த இரட்டை இலக்க வளர்ச்சியை, கடைசியாக எப்போது எட்டினோம் தெரியுமா? 14 ஆண்டுகளுக்கு முன்பு, அதுவும் தி.மு.க. ஆட்சியில்தான். தமிழ்நாட்டுக்கு எதிராக செயல்படுவதிலும்,




தி.மு.க. அரசுக்கு குடைச்சல் கொடுப்பதிலும் கவனமாக இருக்கும் ஒன்றிய அரசாலேயே, இந்த வளர்ச்சியை மறைக்க முடியவில்லை; மறுக்க முடியவில்லை.

தமிழ்நாட்டின் ஜிஎஸ்டிபி எவ்வளவு? 17 லட்சத்து 23 ஆயிரத்து 698 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. தனிநபர் வருமானம் 3 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய். தேசிய சராசரியுடன் கூட ஒப்பீடு செய்தால், இது, 1.74 மடங்கு அதிகம். அடுத்து, இந்தியா முழுவதும் 50 சதவீதம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில்தான் அறிவியல் ஆய்வகம் இருக்கிறது. இதுவே தமிழ்நாட்டில் 98.3 சதவீதம் பள்ளிகளில் ஆய்வகம் இருக்கிறது. ழி.மி.ஸி.தி. தரவரிசையில், தலைசிறந்த நூறு கல்லூரிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 33. நாட்டின் முதல் 50 பல்கலைக்கழகங்களில் 10 தமிழ்நாட்டில்தான் இருக்கிறது!

நிதி ஆயோக் வெளியிட்ட S.D.G குறியீட்டில், 78 புள்ளிகளோடு, தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இப்படி, எந்த புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டாலும், தமிழ்நாடு மேலே இருக்கிறது! அதனால்தான், 65க்கு மேற்பட்ட ஒன்றிய அரசு விருதுகள் தமிழ்நாட்டை தேடி வருகிறது.

இப்படி ஏராளமான புள்ளிவிவரங்களை என்னால் பட்டியலிட முடியும். இதையெல்லாம் சாதாரணமாக நாங்கள் சாதித்துவிடவில்லை. ஏராளமான மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி, எதிர்காலத்திற்கான முதலீடுகளை செய்து, சாதித்திருக்கிறோம்.

திராவிட மாடல் செயல்படுத்தும் திட்டங்களைப் பார்த்து, பல்வேறு மாநிலங்களில், அந்த திட்டங்களை கொண்டு வருகிறார்கள். இப்போதுகூட, எங்களின் தோழி விடுதியை மாடலாக எடுத்துகொண்டு. ஒன்றிய அரசு பட்ஜெட்டில் ஒரு திட்டம் அறிவித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் தரமான மருத்துவத்தை கொண்டு சேர்க்க வேண்டும் என்று நாங்கள் உருவாக்கிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை ஐ.நா. அமைப்பே விருது கொடுத்து பாராட்டியிருக்கிறது! நாங்கள் செய்வது எல்லாமே முன்னோடித் திட்டங்களாக மாறியிருக்கிறது.

தி.மு.க. அரசு தொடர்ந்தால் தான், தமிழ்நாட்டின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என்று மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்கு என்றைக்கும் உண்மையாக இருக்க வேண்டும் என்றுதான் நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கிறோம். அதேசமயம், இவ்வளவு நன்மைகள் செய்யக்கூடிய தி.மு.க. அரசுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படியெல்லாம் நெருக்கடிகளை கொடுக்கிறது என்பதையும் மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நிதிப்பகிர்வு, வரிப்பகிர்வு, சிறப்புத் திட்டங்கள், ரயில்வே திட்டங்கள் என்று எல்லாவற்றிலும் தமிழ்நாட்டிற்கு அநீதியையும் துரோகத்தையும்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏன், இப்போது வெளியிட்ட பட்ஜெட்டில்கூட அவர்கள் தமிழ்நாட்டிற்கு செய்தது என்ன? தமிழ்நாட்டிற்கு நன்மை செய்வார்கள் என்று நம்பிதான் கோரிக்கைகள் வைக்கிறோம். ஆனால், பட்ஜெட்டில் தந்தது ‘ஜீரோ’தான்! இப்போது, என்டிஏ கூட்டணிக்கு அதே ஜீரோவை மக்களும் திருப்பித் தர போகிறார்கள். மக்கள் எல்லாவற்றையும் பார்த்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

நிர்வாக ரீதியாக இந்த அளவுக்கு இடைஞ்சல்கள் கொடுப்பது, ஆளுநரை வைத்தும், அவதூறுகள் பரப்பியும், அரசியல் ரீதியாக சீண்டிப் பார்க்கிறார்கள். ஊழல் கறை படிந்த அத்தனை பேரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு, பொய்களை பரப்பிகொண்டு, தேர்தலை சந்திக்க வருகிறார்கள். இந்த ஊழல் கூட்டணிக்கு பெயர் டபுள் எஞ்சின். அந்த டப்பா எஞ்சினுடைய லட்சணத்தை டெல்லி, உத்தரப் பிரதேசம், பிஹார் என்று பல மாநிலங்களில் பார்த்துகொண்டு தான் இருக்கிறோமே?

பா.ஜ.க.வைப் பொறுத்தவரைக்கும், வெறுப்பைப் பரப்பி, பிரச்சினைகளை உருவாக்கி, அதில் குளிர்காய வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஒரே ஒரு உதாரணத்தை சொல்கிறேன். தமிழ்நாட்டைப் போலவே, அசாமிலும் இப்போது தேர்தல் வரப்போகிறது. அதற்கு, அசாம் பி.ஜே.பி.யின் சோசியல் மீடியா பக்கங்களில் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்கள். நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். அதில், அந்த மாநிலத்தைச் சார்ந்த ஆளும் பா.ஜ.க. முதல்வர் துப்பாக்கியில் குறி வைப்பது போல போட்டிருந்தார்கள். அதுவும் யாருக்கு எதிராக? இப்படிப்பட்ட காட்சியை வைப்பதற்கான துணிச்சல் அவர்களுக்கு எங்கிருந்து வந்தது.

ஜனநாயக இந்தியாவில், இப்படியெல்லாம் நடக்கும் என்று யாராவது நினைத்துப் பார்த்திருப்போமா. இந்த நிலைமையைதான் இந்தியா முழுவதும் ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு துணையாக இருப்பது இரண்டு விஷயம். ஒன்று, அடிமைகள் ரூ மற்றொன்று, அவதூறுகள்.

இதையெல்லாம் பயன்படுத்தி ஜனநாயகத்தின் அத்தனை விழுமியங்களையும் ஒழித்திடவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகள் நிச்சயம் இடம் கொடுக்கக் கூடாது. தமிழ்நாட்டிற்கு சேரவேண்டிய நிதியையும், நீதியையும் நிச்சயமாக நாங்கள் பெற்றுத் தருவோம். பாஜகவின் பாசிச அரசியல் தமிழ்நாட்டில் நிச்சயம், நிச்சயம், நிச்சயமாக அது எடுபடாது! நிறைவேறாது. திராவிட மாடல் 2.ளிவில் தமிழ்நாட்டை காத்து இந்தியாவின் நம்பர் 1 மாநிலமாக தொடர்ந்து வளர்த்தெடுப்பது நிச்சயம்” என்றார் முதல்வர் ஸ்டாலின்.

## பாஜக மகளிர் அணி தலைவி தற்கொலை முயற்சி: காரைக்குடியில் பரபரப்பு

காரைக்குடி, பிப்.12

சிவகங்கை மாவட்ட பாஜக மகளிர் அணித் தலைவி ராஜேஸ்வரி தற்கொலைக்கு முயன்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவத்தின் பின்னணி:

பாரதிய ஜனதா கட்சியின் சிவகங்கை மாவட்டத் தலைவர் பாண்டிதுரை என்பவர், ராஜேஸ்வரியை "போட்டோ போடச் சொல்லி" கட்டாயப்படுத்தி கொடுமைப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த ராஜேஸ்வரி தற்கொலை முடிவை எடுத்ததாகத் தெரிகிறது.

வெளியான ஆடியோ:

தான் தற்கொலை செய்து கொள்ளப்



போவதாக மாநில மகளிர் அணித் தலைவி கவிதாவிடம் ராஜேஸ்வரி பேசிய உருக்கமான ஆடியோ தற்போது இணையதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது. இச்சம்பவம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினர் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

முக்கிய அறிவிப்பு: மன அழுத்தம் அல்லது தற்கொலை எண்ணம்



இருந்தால், உடனடியாக சினேகா தற்கொலை தடுப்பு உதவி மையத்தை (04424640050) அல்லது மாநில அரசின் உதவி மையத்தை (104) தொடர்பு கொள்ளவும்.

## தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

சென்னை: பிப்.12-

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலையொட்டி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை:

தோழர்கள் டி.எம்.மூர்த்தி ஒருங்கிணைப்பாளர், க.சந்தானம், வஹிதா நிஜாம், மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திர நாத், எம்.செல்வராஜ், த.லெனின், சு.மோகன் குமார், பி.எஸ். மாசிலாமணி, அ.பாஸ்கர் ஆகியோர் கொண்ட தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கு ஏதுவாக அனைத்து துறை அமைப்புகளும், சமூக ஆர்வலர்கள், அறிவு ஜீவிகள் உள்ளிட்ட பொது மக்களும் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழு “பாலன் இல்லம்” எண் 43/19, செவாலியர் சிவாஜி கணேசன் சாலை, தியாகராயா நகர், சென்னை 600 017, அலைபேசி எண்: 98408 54707, மின்னஞ்சல்: cpi.tamilnadu@gmail.com

## ஊராட்சி செயலாளர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்க ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை: பிப்.12-

ஊராட்சி செயலாளர்களை அடக்குமுறைகள் மூலம் பணிய வைக்க முற்படாமல், பழிவாங்கும் நடவடிக்கையை கைவிட்டு தகுதிக்கேற்ற உறுதியளிக்கப்பட்டஓய்வூதியம் வழங்க அரசு முன்வர வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் 12,500க்கும் மேற்பட்ட ஊராட்சி செயலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். குறைந்த ஊதியத்தில் ஒப்பந்தப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு 2018ம் ஆண்டு முதல் ரூ.15,900 ரூ ரூ.50,400 அடிப்படை ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர். ஆனால், அவர்கள் ஓய்வுபெற்ற பிறகு ரூ.2,000 மட்டுமே மாத ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையை மாற்றி தங்களின் ஊதிய விகிதத்திற்கு ஏற்ற வகையில் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் இணைத்து அரசாணை வெளியிடவேண்டும் என்பதை வலியிறுத்தி கடந்த ஜனவரி 6ம் தேதி முதல் 13ம் தேதிவரை தொடர் விடுப்பு எடுத்து, சென்னையில் காத்திருப்புப் போராட்டமும் நடத்தினர். இதனைத் தொடர்ந்து ஊராட்சி செயலாளர்களுடன் பேச்சு நடத்திய ஆட்சியாளர்கள், அவர்களும் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று வாக்குறுதி அளித்தது. இதையடுத்து போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதாக அறிவித்தனர்.

ஆனால், அளித்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றாததை உணர்ந்த ஊராட்சி செயலாளர்கள் கடந்த 4ம் தேதி முதல் மீண்டும் போராட்டத்தைத் தொடரும் நிலையில், அவர்களிடம் அரசு பேசாமல், 500க்கும் மேற்பட்ட ஊராட்சி செயலாளர்களை அரசு பணியிடை நீக்கம் செய்துள்ளது. மேலும் பணி நீக்க உத்தரவுகள் வட்டார வளர்ச்சி அலுவலர்களால் பிறப்பிக்கப்பட்டு மாநில அளவில் ரகசியமாக பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. மேலும் 600க்கும் மேற்பட்டோரை ஒன்றியம் விட்டு ஒன்றியத்திற்கு பணியிட மாற்றம் செய்திருக்கிறது.

ஊராட்சி செயலாளர்களுக்கு தகுதிக்கேற்ற ஓய்வூதியம் வழங்க மறுப்பது அடக்குமுறையாகும். இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்களாக இருந்துவரும் நிலையில், அக்கிராமங்களின் ஊராட்சி செயலாளராக இருந்துவரும் இவர்களே அனைத்து பணிகளையும் செய்து வருகின்றனர். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றி போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பதிலாக அடக்குமுறைகள் மூலம் பணியவைக்க முயல்வது மிகத்தவறு.

எனவே அரசு பழிவாங்கும் நடவடிக்கையை கைவிட்டு தகுதிக்கேற்ற உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்க வேண்டும். மேலும், பணியிடை நீக்கம், பணியிட மாற்றம் போன்ற ஒழுங்கு நடவடிக்கைகளை ரத்து செய்து, ஊராட்சி செயலர்களை ஏற்கனவே இருந்த இடத்திலேயே பணி செய்ய அரசு அனுமதிக்க வேண்டும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## திருப்போரூர் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமான ரூ.700 கோடி மதிப்பிலான 226 ஏக்கர் நிலங்கள் மீட்பு: அறநிலையத்துறை தகவல்

சென்னை: பிப்.12-

சென்னையை அடுத்த திருப்போரூர் கந்தசாமி கோயில் மற்றும் ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான சொந்தமான 550 எக்கர் நிலம் ஆக்கிரமிப்பிள் உள்ளதாகவும்., அதனை மீட்க உத்தரவிடவேண்டும் என கூறி வழக்கறிஞர் ஜெகநாத் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்த உயர்நீதிமன்றம் 2028 மே மாதத்திற்குள் ஆகிரமிப்புகளை அகற்ற வேண்டும் என உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை என கூறி வழக்கறிஞர் ஜெகநாத் மீண்டும் உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு நீதிபதிஎம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. நீதிமன்ற உத்தரவுப்படி இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர், திருப்போரூர் கந்தசாமி கோயில் செயலாளர் குமாரவேல் ஆகியோர் நேரில் ஆஜராகினர்.

அப்போது அவர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமான ரூ.700 கோடி மதிப்பிலான 226 ஏக்கர் விவசாய நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக அறிக்கை தாக்கல் செய்தார். இதனை ஏற்றுகொண்ட நீதிபதிகள், நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

# ஒரு கட்சி ஆட்சி ஜனநாயகத்துக்கு விரோதமானது திமுக ஆட்சியில் அமைச்சர்கள் தொகுதியில் சாதிய பாகுபாடு அதிகம் இருக்கிறது புதிய தமிழக கட்சி தலைவர் கிருஷ்ணசாமி பேட்டி



தேவகோட்டை பிப். 12-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் புதிய தமிழகம் கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கட்சி தலைவர் கிருஷ்ணசாமி செய்தியாளர்களிடம் கூறும் போது தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பது ஒரு கலாச்சாரமாக உள்ளது வாக்காளர்கள் தங்களது பொறுப்புகளை உணர்ந்து சரியான வேட்பாளர்களை தேர்வு செய்ய வேண்டும் கனிசமான இடங்களில் கூட்டணி அமைத்து போட்டியிடுவோம் கூட்டணி அமைத்து போட்டி யிட்டுவிட்டு கூட்டணி கட்சிகளுக்கு ஆட்சியில் இடம் இல்லை என்று மாற்ற முடியாத விதி போல் கடைபிடித்து வருகின்றனர். அதை இந்த தேர்தலில் மாற்றுவது எங்களது நோக்கம். ஒரு கட்சி ஆட்சி ஜனநாகயததிற்கு விரோதமானது. அதனால் தான் நாங்கள் கூட்டணி ஆட்சியை வலியுறுத்துகிறோம் மகாராஷ்டிரம் ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஒரு கட்சி பெரும்பான்மையாக இருந்தாலும் கூட்டணி கட்சிகளுக்கு ஆட்சியில் பங்கு கொடுக்கின்றனர் நாடாளுமன்றம் சட்டப்பேரவையில் பட்டியலின மக்கள் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு கொடுத்ததே அதிகாரத்துக்கு வரத் தான் அப்போது தான் அவர்களது பிரச்சினையை தீர்க்க முடியும் ஆனால் அவர்களை அதிகாரத் திலிருந்து வெகுதூரம் தள்ளி வைக்கின்றனர் அதனால் தான் அவர்களது பிரச்சினையும் அப்படியே இருக்கிறது அதனால் சாதி பிரச்சினை தொடர்கிறது கூட்டணி அரசை அமைக்க விரும்பும் கட்சியுடன் கூட்டணி என்ற கோட்பாடுடன் இருக்கிறோம் எங்கள் சமூக முன்னேற்றத்துக்கு கூட்டணி ஆட்சியை தீர்வு திமுக ஆட்சியில் அமைச்சர்கள் தொகுதியில் சாதிய பாகுபாடு அதிகம் இருக்கிறது தேர்தலில் கூட்டணி வைப்பது முக்கியமல்ல. நேர்மையான முறையில் கூட்டணி தர்மம் அடிப்படையில் பணியாற்ற வேண்டும். இன்னும் தேர்தலுக்கு ஒரு மாத கால அவகாசம் உள்ளதால் கூட்டணிக்கு ஏன் அவசரப்பட வேண்டும். கூட்டணி கட்சிகள் எங்கள் வெற்றிக்கு பாடுபட்டால் நாங்களும் பாடுபடுவோம் என்று கூறினார்.

சிவகங்கை மாவட்ட கிழக்குச் செயலாளர் நியூட்டன் தேவகோட்டை நகர செயலாளர் அமர்நாதன் மற்றும் பல நிர்வாகிகளுக்கு கலந்து கொண்டனர்..

# தமிழ்நாட்டில் முதன்முறையாக விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொண்ட சிவகங்கை கவுன்சிலர் அயூப் கான்



சிவகங்கை பிப்.12-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தலைநகரம், சிவகங்கை நகராட்சியானது 1965 ல் மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கி பின்னர் 1998 களின் துவக்கத்தில் முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ஜசெயல்பட்டு வருகிறது...

மொத்தம் 27 வார்டுகளுடன் செயல் படும் சிவகங்கை நகராட்சியின் தலைவராக திமுக சிவகங்கை நகரச்செயலாளரான சி. எம். துரை ஆனந்த் பணியாற்றி வருகிறார்...

இவரது நகரசபையில் தற்போது நகர்மன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றி வருபவர் திமுக வைச்சேர்ந்த அயூப் கான் ஆவார்...

மேலும் இவர் தற்போது சிவகங்கை மாவட்ட திமுக வின் மாவட்ட செய்தித் தொடர்பாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்...

கடந்த 2006 லிருந்து இன்று வரையில் தொடர்ந்து ஒரே வார்டில் நான்கு முறையாக முதல் இரண்டு முறை இவரது மனைவியும், அதன்பின் அயூப் கான் இரண்டு முறையும் மக்கள் பிரதிநிதியாக செயலாற்றி வருகின்றார்...

சுகாதாரப் பணியாளர்களின் குப்பை சேகரிக்கும் போது தங்களது அடையாளமான விஷில் சத்தத்தை மாற்றி அதற்குப் பதிலாக சுகாதாரத்தின் மேன்மையை போற்றிடும் வகையில் குப்பை சேகரிக்கும் விழிப்புணர்வு பாடல்கள் அடங்கிய ஒலிப்பாண்களை தனது சொந்த செலவில் வழங்கியுள்ளார்...

இது சுகாதாரப் பணியாளர்களைத் தாண்டி பொது மக்களையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது...

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கொரணோ காலகட்டத்தில் இறந்து போன சடலங்களை அதிகளவில் தானாக முன்வந்து அடக்கம் செய்ததை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் வெகுவாகப் பாராட்டி நினைவுப் பரிசினை வழங்கியது குறிப்பிடத்தக்கது...

இயல்பாகவே மக்களோடு மக்களாக எளிதில் பழகிடும் சுபாவம் கொண்ட கவுன்சிலர் அயூப் கான் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர், சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் பேரன்பைப் பெற்றவர் என்பது கூடுதல் தகவலாகும்...

தனது வார்டுப் பகுதி பொதுமக்களின் நலனையே தனது நலனாகவே பாவித்து வரும் கவுன்சிலர் அயூப் கான் அவர்களது கழகப்பணியுடன் கூடிய மக்கள் பணிகள் தொடரட்டும் என வாழ்த்திடுவோம்.




# சென்னை தாம்பரம் அடுத்த காயிதே மில்லத் கல்லூரியின் 50 வது பொன்விழா கொண்டாட்டத்தின் நிறைவு விழா

மேடவாக்கம், பிப் .12-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அடுத்த புனித தோமையார் மலைஒன்றியத்திற்கு உட்பட்ட மேடவாக்கம் ஊராட்சியில் அமைந்துள்ள காயிதே மில்லத் கல்லூரியின் 50ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு (10.02.26) அன்று காலை 10 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில், மாவட்டக் கழகச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான, மா. சுப்பிரமணியன் ., உயர்கல்வித் துறை அமைச்சர்., கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்., அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்., ச. அரவிந்த் ரமேஷ் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். தொடர்ந்து கல்லூரி முதல்வர்., முனைவர், அப்துல் தவாப், கல்லூரி செயலர்., தாளாளர், எம். ஜி. தாவூத் வியகக்கான், நீதிபதி.,கே. என். பாஷா, முகமது அஷ்ரப், ஜனாப் முகமது அலி, சிங்கப்பூர் ராயல் குரூப்ஸ் தலைவர்., ஜனாப் சுராஜ்த்தின், இதயத்துல்லா ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார்கள். இந்த நிகழ்வில் ஒன்றிய பெருந்தலைவர்., சங்கீதா பாரதிராஜன், ஒன்றிய செயலாளர், கோவிலம்பாக்கம், ஜி வெங்கடேசன், மேடவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், சிவ பூசணம் ரவி, இளைஞர் அணி மாவட்ட துணைச் செயலாளர்., ஜே. இ. பாண்டியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர், ஓ. கே .எஸ். சதீஷ், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர், ஆர். எஸ் .லோகேஸ்வரா, ஒன்றிய துணைச் செயலாளர், எச்.டி .போஸ், ஒன்றிய கவுன்சிலர், கல்பனா சுரேஷ், துணைத் தலைவர்.,கோபு உள்ளிட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





■ சிவகங்கை மாவட்டம் மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர் சே.பிரேம்குமார் பள்ளியின் அலுவலக பயன்பாட்டிற்கு கம்ப்யூட்டர் ஐ நன்கொடையாக நேற்று வழங்கினார். பள்ளி மேலாண்மைக்குழு தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் நன்கொடை செய்தமைக்கு, மாணவனின் அம்மாவை பள்ளி மேலாண்மைக்குழு சார்பாக பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவிக்கப்பட்டது. ஆசிரியப்பயிற்றுனர் கலா கலந்து கொண்டு மாணவனின் நற்செயலை பாராட்டினார்.




# தேனி மாவட்டம் பெரியகுளம் முழு குர் ஆனையும் மனனமாக ஓதும் சிறப்பு நிகழ்ச்சி

பெரியகுளம். பிப்.12-

தேனி மாவட்டம் பெரியகுளம் ஜாமிஆ அல் அஷரத்துல் முபஷ் ஷரா இறையியல் கல்லூரியில் ஒரே நபர், ஒரே நாளில் முழு குர்ஆனையும் மனப்பாடமாக ஓதும் நிகழ்ச்சிநடைபெற்றது. ஜாமி ஆ வின் மாணவன் சித்தியன்கோட்டை பகுதியைச் சார்ந்த ஹாஃபிழ் முக்ஸித் மீரான் முழு குர்ஆனையும் மனனமாக ஓதினார்.ஜே ஏ எம் இறையியல் கல்லூரி தலைவர் அபுதாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி யில்,உத்தமபாளையம் பெரிய பள்ளிவாசல் தலைவர் தர்வேஷ் முஹ்யித்தீன்,தேனி மாவட்ட முஸ்லிம் மேம்பாட்டு கூட்டமைப்பு பொதுச்செயலாளர் பொன்ராஜ் கொந்தாளம், ஜே.ஏ.எம். இறையியல் கல்லூரி பொருளாளர் அஜ்ஜூர் ரஹ்மான், முன்னாள் தலைமை இமாம் முஹம்மது அலி, தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமா சபை துணைத்தலைவர் அலாவுத்தீன்,மாநில லாரி உரிமையாளர்கள் சங்கம் துணைத் தலைவர் நிஜாத் ரகுமான், தேனி மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை துணைத் தலைவர் ஆலிம் அஹமது முஸ்தபா,வட்டார ஜமாஅத்துல் உலமா சபை செயலாளர் அஹ்மது பௌஜீத்தீன்,உட்பட பலர் முன்னிலை வகித்தனர்.ஜே ஏ எம் இறையியல் கல்லூரி நிறுவனர் மற்றும் முதல்வர் முகமது உசேன் மன்பஈ வரவேற்புரையாற்றினார். மக்கா பள்ளிவாசல் தலைவர் அப்துல் ரகுமான் துவக்க உரையாற்றினார். முஹம்மது மீரான், மீரா மைதீன், முகமது அலி ஜின்னா, முகமது இத்ரிஸ்,உபயத்துல்லாஹ், பீர் முஹம்மது, பக்ருத்தீன் பாக்கர் முஹம்மது அப்துல் காசிம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.ஐக்கிய சமாதான பேரவை பொதுச் செயலாளர் ஏ எம் இறை யியல் கல்லூரி நிர்வாகி முஜிபுர் ரஹ்மான் மற்றும் பேராசிரியர் அமீர் தங்கள் சிறப்புரையாற்றினர். துணை முதல்வர் அப்துல் அஹத் நன்றி உரையாற்றினார். மதராஸாவில் பேராசிரியர்கள் இறை யியல் கல்லூரி நிர்வாகிகள் முபஷ்ஷரா உலமா பேரவையினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# போச்சம்பள்ளியில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் : கலாநிதி வீராசாமி பங்கேற்பு

கிருஷ்ணகிரி, பிப்.12-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாடு தலை குனியாது பரப்புரை பொதுக்கூட்டம் போச் சம்பள்ளியில் நடை பெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார். தெற்கு ஒன்றிய செயலாளர் சாந்த மூர்த்தி வர வேற்றார். ஒன்றிய செய லாளர்கள் மகேந்திரன், தேங்காய் சுப்பிரமணி,சரவணன், குண.வசந்தரசு, செந்தில், ராஜேந் திரன், அறிஞர், இளை யராஜா, நரசிம்மன், பேரூராட்சி தலைவர் தம்பிதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். திமுக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி பேசினார். இந்த கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அன்பரசன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் தினேஷ், துணை அமைப்பாளர் சரவணன், மாவட்ட பொருளாளர் கதிரவன், ஊராட்சி மன்ற தலைவர்கள் மாதவிமுருகேசன், சசிகலா அர்ஜூனன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வளர் இளம் பெண்கள் பாதுகாப்புக்காக ஜல்லிக்கட்டு : கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி விழிப்புணர்வில் மதுரை ரோட்டரியின் மாபெரும் முயற்சி



மதுரை, பிப்.12-

கர்ப்பப்பை வாய் புற்றுநோயைத் தடுக்கும் தடுப்பூசி குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், மதுரை மாவட்டத்தின் அனைத்து ரோட்டரி சங்கங்களும் இணைந்து வரும் 14ஆம் தேதி சனிக்கிழமை அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை ஏறுதழுவுதல் மைதானத்தில் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை நடத்துகின்றன.

வளர் இளம் பெண்களை அதிகளவில் பாதிக்கும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் குறித்து சமூகத்தில் போதிய விழிப்புணர்வு இல்லாத நிலையில், 9 முதல் 14 வயது வரையிலான அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு ரோட்டரி சங்கங்கள் சார்பில் இலவசமாக தடுப்பூசி செலுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதை பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் 800 காளைகள் மற்றும் 600 மாடுபிடி வீரர்கள் பங்கேற்க உள்ளனர். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி கொடியசைத்து விழாவைத் தொடங்கி வைக்கிறார். ரோட்டரி மாவட்டம் 3000 ஆளுநர் ஜே. கார்த்திக், சர்வதேச ரோட்டரி இயக்குநரும் துணைத் தலைவர் தேர்வுமான எம். முருகானந்தம், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் ஐஏஎஸ், மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் அரவிந்த் ஐபிஎஸ், சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

இது குறித்து நிகழ்ச்சி தலைவர் மொட்டைய சாமி, செயலாளர் செந்தில், பாரதி இன்ஃபினிட்டி மருத்துவமனை இயக்குனர் டாக்டர் ஆழ்வார் ராமானுஜம், டாக்டர் ரேணுகா தேவி ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

“கர்ப்பப்பை வாய் புற்றுநோயால் இந்திய அளவில் தினமும் சுமார் 800 பெண்கள் உயிரிழக்கின்றனர். வெளிநாடுகளில் தடுப்பூசி வழங்கப்பட்டு நல்ல பலன்கள் கிடைத்து வருகின்றன. ஆனால் நம் நாட்டில் விழிப்புணர்வு குறைவாக இருப்பதால் பலர் இந்த தடுப்பூசியை பெறாமல் உள்ளனர். அடித்தட்டு மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பொதுமக்கள் அதிகமாக கூடும் ஜல்லிக்கட்டு மேடையை தேர்வு செய்துள்ளோம்” என்றனர்.

மேலும், ரோட்டரி மாவட்டம் 3000 ஆளுநர் கார்த்திக் அவர்களின் கனவு திட்டமாக, வரும் ஜூன் மாதத்திற்குள் ஒரு லட்சம் இளம் பெண்களுக்கு இலவசமாக கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் சிறந்த மாடுபிடி வீரருக்கு கேடிஎம் பைக் பரிசாக வழங்கப்பட உள்ளது. சிறந்த காளைக்காக காங்கேயம் நாட்டு பசு மற்றும் கன்றும் வழங்கப்படும். இதைத் தவிர பல்வேறு பரிசுகள் மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளுக்காக வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியை தலைவர் மொட்டையா சாமி, செயலாளர் செந்தில், துணைத் தலைவர் சிவக்குமார், மண்டல ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், உதவி ஆளுநர்கள் நெல்லை பாலு, சுரேஷ் பாண்டியன், ஜல்லிக்கட்டு ரோட்டரி சங்க தலைவர் கதிரவன் மற்றும் அனைத்து ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் இணைந்து சிறப்பாக ஏற்பாடு செய்து வருகின்றனர்.

பாரம்பரியமும் பொதுநலப் பணியும் இணையும் இந்த ஜல்லிக்கட்டு விழா, சமூக விழிப்புணர்வுக்கு புதிய திசை காட்டும் முயற்சியாக பார்க்கப்படுகிறது.



■ கிருஷ்ணகிரி தேவராஜ் மஹாலில், "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் கீழ், "என் ஊர் என் கனவு திட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத் தொலைநோக்கு திட்டம் 2030" குறித்து கருத்துக்கேட்புக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் தலைமையில், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) பெரியசாமி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.





## ஊத்துக்கோட்டை பேரூர் திமுக கோஷ்டி பூசலால் அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்டத்துணை அமைப்பாளர் பதவி பறிப்பு

திருவள்ளூர், பிப்.12-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் திமுக கோஷ்டி பூசலால் 11வது வார்டு திமுக கவுன்சிலரும் அமைப்பு சாரா ஓட்டுனர் அணியின் மாவட்டத் துணை அமைப்பாளராக செயல்பட்டு வந்த கோர்டுமணி (எ) மணிகண்டன் என்பவரின் பதவிப்பறிப்பு மேலும் திமுக தலைவர் மு க ஸ்டாலின் அவர்களுடைய ஆணைப்படி மாவட்டச் செயலாளராக பணியாற்றி வந்த T.J.கோவிந்தராஜன் அவர்களை நீக்கி புதிய மாவட்ட செயலாளராக வல்லூர் MSK.ரமேஷ்ராஜ் அவர்கள் நியேமிக்கப்பட்டார் இந்நிலையில் மாவட்டச் செயலாளருக்கு ஆதரவாகவும் ஒரு அணியும் சட்டமன்ற உறுப்பினருக்கு ஆதரவாக ஒரு அணியும் இரு கோஷ்டிகளாக பிரிந்து செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது இந்த நிலையில் சட்டமன்ற ஆதரவாளராக செயல்பட்டு வந்ததாக கூறப்படுகின்ற கோல்டுமணியின் பதவி நீக்கத்தை அறிந்த அவரது ஆதரவாளர்கள் அவருக்கு ஆதரவு தெரிவித்து தனியார் திருமண மண்டபத்தில் 10.02.2026 மாலை 7 மணி அளவில் கோல்டுமணி அவர்களுக்கு மாலை அணிவித்து தலையில் கிரீடம் வைத்து பட்டாசு வெடித்து கேக் வெட்டிதமிழக முதல்வருக்கும்துணை முதலமைச்சர் அவர்களுக்கு பதவி பறிபோனாலும் தொடர்ந்து கட்சி பணியினை அதே உற்சாகத்துடன் பன்மடங்கு பணியாற்றுவோம் என கோஷங்கள் எழுப்பி வாழ்த்து தெரிவித்து தங்கள் ஆதரவை தெரிவித்தனர் இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு காணப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



## வட்டார வள மையம் சார்பில் பள்ளி செல்லா குழந்தைகள் கணக்கெடுப்பு பணி

தஞ்சாவூர், பிப்.12-

தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டார வள மையம் சார்பில் பள்ளி செல்லா குழந்தைகள் கணக்க எடுக்கும் பணி வானராங்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நடைபெற்றது.

தஞ்சை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பேபி அறிவுறுத்தலின் படி மாவட்ட உதவி திட்ட அலுவலர் மாரிமுத்து தலைமையில் மாவட்ட சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அலுவலர் ராசி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மீரா, மகாலெட்சுமி, திருவையாறு வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ) பிரதீப், வானரங்குடி அரசு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் வாசுகி, ஆசிரியர் ஹரிகிருஷ்ணன் ஆகியோர் வானரங்குடி மற்றும் சுற்றுவட்ட பகுதிகளில் பள்ளி செல்லாமல் செங்கல்சூளையில் கூலிவேலை பார்க்கும் குழந்தைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர் இதில் நேபாள நாட்டைச் சேர்ந்த மாணவர் சிவம் (9) கடலூர் மாவட்டம் சிவாஷ்னி(8) விழுப்புரம் மாவட்டம் ரம்யா (10) பவானி (7) உள்ளிட்ட 4 குழந்தைகள் கண்டறியப்பட்டு அரசு தொடக்கப்பள்ளியில் வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்கப்பட்டனர்.

## தேசிய மீன்வள டிஜிட்டல் தளத்தில் பதிவு செய்ய மாவட்ட ஆட்சியர் அழைப்பு

விருதுநகர், பிப்12-

விருதுநகர் மாவட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் மற்றும் நலவாரிய உறுப்பினர்கள் தேசிய மீன்வள டிஜிட்டல் தளத்தில் பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தகவல். தெரிவித்துள்ளார் விருதுநகர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் தேசிய மீன்வள டிஜிட்டல் தளம் (NFDP) என்ற இணையதளத்தில் பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



மீனவர் குழு விபத்து காப்பீட்டுத் திட்டத்தின் (GAIS) மூலம் வழங்கப்படும் நிவாரணத் தொகை பெற்றிட தேசிய மீன்வள டிஜிட்டல் தளத்தில் (NFDP) பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.


அனைத்து உறுப்பினர்களும் அருகாமையிலுள்ள இசேவை மையம் மற்றும் CSC கணினி மையங்களை அணுகி தேசிய மீன்வள டிஜிட்டல் தளத்தில் (NFDP) பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், (பழைய கட்டிடம் இரண்டாவது தளம்) விருதுநகர் 626 001. தொலைபேசி எண்: 04562244707 என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தெரிவித்துள்ளார்.

## சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விருப்ப மனு: தபால் மூலம் அனுப்பி வைத்த தவெக நிர்வாகி

மானாமதுரை பிப்.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில், தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட ஆட்டோ ஓட்டுநர் ஒருவர் விருப்ப மனு அளித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





விருப்ப மனுத் தாக்கல்

மானாமதுரை தவெக தீவிர தொண்டர் மலைச்சாமி. ஆட்டோ ஓட்டுநராகப் பணியாற்றி வரும் இவர், நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார். இதற்காக, தனது விருப்ப மனுவை மானாமதுரை தபால் நிலையம் வழியாகப் பனையூரில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்.

பின்னணி கட்சியின் தீவிரத் தொண்டராகச் செயல்பட்டு வரும் மலைச்சாமி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு கவனம் ஈர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது அவர் முறைப்படி கட்சி சார்பில் போட்டியிட ஆர்வம் காட்டி வருவது மானாமதுரை அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.



## காவேரிப்பட்டணம் அருகே 29 ஆண்டுக்கு பின்பு திரவுபதி அம்மன் கோயில் விழா

கிருஷ்ணகிரி, பிப்.12-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் தளி அள்ளி ஊராட்சி கோவிலூரில் 29 ஆண்டுக்கு பின்பு திரவுபதி அம்மன் கோயிலில் மகாபாரத பிரசங்கம், நாடகம் மற்றும் அக்கினி வசந்த உற்சவ விழா நடைப்பெற்றது. தொடந்து திரௌபதி அம்மனுக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. நிகழ்ச்சியில், தளி அள்ளி ஊராட்சிக் குட்பட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பெண்கள் தாய்வீட்டு சீதனமாக சுவாமிக்கு கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் மற்றும் தெருக்கூத்து கலைஞர்களின் நடனத்துடன் ஊர்வலமாக சீர்வரிசை கொண்டு வந்தனர். தொடந்து அம்மனுக்கு திருக்கல்யாணம் நடைப் பெற்றது. நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள், மற்றும் ஊர் பொதுமக் கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்த னர்.

இரவு பிக் கிலி ஊராட்சி தண்டுகாரன அள்ளி தியாகி சுப்பிரமணி சிவா நாடக மன்ற குழு சார்பில், சுபத்திரை திருமண நாடகம் நடைபெற்றது. ஒவ் வொரு நாளும் கோவிந்தராசன் தலைமையில் மகாபாரத பிரசங்க சொற்பொழிவு நிகழ்வு நடைப்பெற்றது. விழாவிற்கு வந்திருந்த பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. விழாவையொட்டி, ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

## மாம்பழ உதிர்வை கட்டுப்படுத்த NAA தெளிப்பு - கோட்டூரில் வேளாண் மாணவி செய்முறை விளக்கம்

தேனி, பிப்.12-

தேனி மாவட்டம் கோட்டூர் கிராமத்தில் மாம்பழ உதிர்வை கட்டுப்படுத்தும் நோக்கில் NAA (நாப்தலீன் அசிட்டிக் அமிலம்) தெளிப்பு குறித்த செய்முறை விளக்கப் பயிற்சி நடைபெற்றது.



மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு பயிலும் மாணவி ஷர்மிலி, கிராமப்புற அனுபவ திட்டம் (RAWE) கீழ் கோட்டூரில் பயிற்சி பெற்று வருகிறார். இதன் ஒரு பகுதியாக அப்பகுதி மாம்பழ தோட்டத்தில் விவசாயிகளுக்கு நேரடி பயிற்சி அளிக்கப்பட்டது.

பட்டாணி அளவு பழநிலையில் 20–40 PPM அளவில் NAA தெளித்தால் முன்கூட்டியே பழ உதிர்வை குறைத்து, மரத்தின் பழத் தாங்கும் திறனை அதிகரிக்க முடியும் என அவர் விளக்கினார். மேலும், சரியான அளவு கணக்கிடும் முறை, மருந்து கலக்கும் விதம், தெளிக்கும் சரியான காலப்பகுதி குறித்து விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இம்முயற்சியை பாராட்டி, தங்களது தோட்டங்களில் இத்தொழில்நுட்பத்தை பின்பற்றுவதாக தெரிவித்தனர்.

## தென்காசி மாவட்டத்தில் ஜே. பி. கல்வி குழுமத்தின் சார்பில் 100% வாக்கு பதிவை வலியுறுத்தி மாரத்தான் போட்டிகள் பிப் 14ல் நடைபெறுகிறது: ஜே.பி கல்வி குழுமத்தின் தாளாளர் அருட்சகோதரி ஆரோக்கியமேரி தகவல்

தென்காசி, பிப்.12-

தென்காசி மாவட்டம் ஆயக்குடி அகரக்கட்டு பகுதியில் அமைந்துள்ள ஜே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் சார்பில் அனைவரும் வருகின்ற தேர்தலில் 100% வாக்களிப்பதை வலியுறுத்தியும், நல்ல தலைவர்களை தேர்வு செய்யவும் தென்காசி மாவட்டத்தினை பசுமை தென்காசியாக உருவாக்கவும் மற்றும் போதையில்லா தென்காசி மாவட்டமாக மாற்றிட வலியுறுத்தும் நோக்கோடு பிப்14ல் ஜே.பி. கல்வி குழுமத்தின் சார்பில் மாரத்தான் போட்டிகள் நடைபெறுவதாக கல்லூரி தாளாளர் அருட் சகோதரி முனைவர் ஆரோக்கிய மேரி தெரிவித்தார். ஜே.பி. கல்வி குழுமத்தின் சார்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிற்கு நிர்வாக இயக்குனர் ஜீ.டு.லிசா வரவேற்பு ஜெபத்துடன், கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் மைக்கேல் மரியதாஸ், பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி செய்தி மற்றும் மக்கள் தொடர்பாளர் மனோகரன் சாமுவேல் வரவேற்புரை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தாளாளர் அருட்சகோதரி முனைவர் ஆரோக்கியமேரி தெரிவித்ததாவது 2007 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இக்கல்வி குழுமம் 2012 ஆம் ஆண்டு முதல் DMI அருட்சகோதரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது எங்கள் கல்லூரியில் 400 மீட்டர் சுற்றளவு கொண்ட விளையாட்டு திடல் அமைந்துள்ளது. இதனால் எங்கள் கல்லூரி தவிர மற்ற அனைத்து கல்லூரிகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விளையாட்டு சம்பந்தமான போட்டிகளுக்கு தங்கள் நிர்வாகம் உதவிட தயாராக உள்ளோம். தற்போது ஜே. பி. மாரத்தான் 2026 என்ற ஒரு திட்டத்தின் கீழ் எதிர்வரும் பிப்ரவரி 14ல் மாரத்தான் போட்டி நடைபெற உள்ளது. இப்போட்டியில் சுமார் 5000 பேர் வரை கலந்து கொள்ளும் அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வயது வரம்பு இன்றி ஆண் பெண் என அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் இந்த மாரத்தான் போட்டி நடைபெறுகிறது வயது வந்த அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்பதோடு நல்ல தலைவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடும் சிந்தனையோடும் செயல்படவும் மேலும் பசுமை தென்காசி, போதையில்லா தென்காசி ஆகியவற்றை வலியுறுத்தி நடைபெறும் மாரத்தான் போட்டி ஆண்களுக்காக தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் இருந்தும் எட்டு கிலோமீட்டரும், பெண்களுக்காக இலத்தூர் விலக்கிலிருந்து கல்லூரி விளையாட்டு திடல் வரை 4 கிலோ மீட்டர் நடைபெற உள்ளது. இந்த போட்டியின் வெற்றியாளருக்கு முதல் பரிசாக ரூபாய் பத்தாயிரமும், இரண்டாவது பரிசு ரூபாய் 8000, மூன்றாவது பரிசு ரூபாய் 6000 இது தவிர ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனியாக தேர்வு செய்யப்படுவார்கள் மாரத்தான் போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் டிஷர்ட் சான்றிதழ் மற்றும் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும் தென்காசி மாவட்ட ஒய். ஆர். சி. பங்களிப்போடு மருத்துவ சேவை வசதி, மற்றும் காவல்துறையின் முழு பாதுகாப்போடு நடைபெறும் இந்த மாரத்தான் போட்டி நிகழ்ச்சி துவங்குவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு வரை முன் பதிவு செய்து கொள்ளலாம் பதிவு கட்டணம் தென்காசி மாவட்ட மக்களின் நிதி நிலையை கருத்தில் கொண்டு ரூபாய் 100 என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனைவரும் இந்த மாரத்தான் போட்டியின் மூலம் நாம் சொல்ல வேண்டிய கருத்துக்களை செயல்களின் மூலம் பொதுமக்களிடம் கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என்பதை உணர்ந்து எங்கள் கல்லூரியோடு பத்திரிகையாளர்களும் இணைந்து செயல்பட கேட்டுக் கொண்டார். இறுதியில் கல்வியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சுரேஷ் ஜான் கென்னடி நன்றி தெரிவித்தார்.





■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 31வது வார்டுக்குட்பட்ட ஆபிரகாம் தெருவில் ரூ.3.80 இலட்சம் மதிப்பீட்டில் சேதமடைந்த அலங்கார தரைகற்கள் சீரமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர்.ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார்.உடன் மாமன்ற உறுப்பினர் சோபி பகுதி செயலாளர் சேக்மீரான் வட்ட செயலாளர் டென்னிஸ் மெர்வின் தி மு க நிர்வாகி .ஜஸ்டின் வின்பிரட் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர.



■ திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்திற்கு உட்பட்ட புதிய எருமை வெட்டிபாளையம் கிராமத்தில், அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பாள் உடனுறை ஸ்ரீ வர முக்தீஸ்வரர் திருக்கோயில் ஆலய புனராவர்த்தன ஜிர்ணோதாரண அஷ்டபந்தன, மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்து அறநிலைத்துறைக்கு உட்பட்ட 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த, இக்கோயில் பக்தகோடிகளுக்கு, வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை தருவதாக கோயில் நிர்வாகிகள் கூறுகின்றனர். இணை ஆணையர் அனிதா , செயல் அலுவலர் மாதவன் இவர்கள் ஏற்பாட்டிலும், கிராமவாசிகள் மற்றும் ஆலய நிர்வாகிகள் கலந்து கொண்டு கும்பாபிஷேகத்தை நடத்தினர். பக்த கோடிகளுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.




# கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் 10ஆவது பட்டமளிப்பு விழா

## 163 மாணவர்களுக்கு பட்டம் - செயற்கை நுண்ணறிவு கல்வி அவசியம் என வலியுறுத்தல்

காரைக்குடி, பிப்.12-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகேயுள்ள கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 10ஆவது பட்டமளிப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கோவிலூர் ஆதீனம் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் தலைமை வகித்து, பட்டம் பெறும் மாணவர்களுக்கு ஆசியுரை வழங்கினார். தனது உரையில் எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தவுள்ள தாக்கம் மற்றும் அதை திறம்பட கையாள வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கினார்.

கல்லூரியின் தாளாளர் முனைவர் மா. வீரப்பன் விழாவில் முன்னிலை வகித்தார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் கி. செந்தில்ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மேற்படிப்பு பயிலும் மாணவர்கள் தங்களது கல்வியில் செயற்கை நுண்ணறிவை முன்னிலைப்படுத்தும் பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்து பயில வேண்டும் என்றும், அவையே எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக அமையும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட 163 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக, கல்லூரியின் முதல்வர் முனைவர் க. கலா கல்லூரியின் சிறப்பு அறிக்கையை வழங்கி வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் முக்கியப் பிரமுகர்கள், கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக, பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கான "கலைத்திருவிழா" போட்டியில் வெற்றிபெற்ற 52 மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். உடன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் பத்மலதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு எஸ்.எல்.பி உயர்நிலை பள்ளிய மாணவ மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா வழங்கினார்

கன்னியாகுமரி, பிப்.12-

கன்னியாகுமரி மாவட்டம். நாகர்கோவில் எஸ்.எல்.பி. உயர்நிலைப்பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு மாணவ மாணவியர்களுக்கு குடல்புழு நீக்க மாத்திரைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, வழங்கி, தெரிவிக்கையில் வளரும் குழந்தைகளுக்கு குடற்புழுக்கள் இருந்தால் உடல் வளர்ச்சி குறைபாடு, இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படுகிறது. 20 முதல் 30 வயதுள்ள பெண்களுக்கு குடற்புழுக்கள் இருந்தால், இரத்த சோகை ஏற்பட்டு எடை குறைவுள்ள குழந்தைகள் பிறக்க வாய்ப்புள்ளது. மேற்கண்ட குறைபாடுகளை களைவதற்கு வருடத்திற்கு இருமுறை குடற்புழு நீக்க மாத்திரை கொடுப்பதுடன் கைகழுவுதல், கழிப்பறைகளை பயன்படுத்துதல் மற்றும் தன் சுத்தம் பேணுதல் ஆகியவற்றை குழந்தைகளுக்கு



கற்றுக்கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் இரத்த சோகை மற்றும் ஊட்டசசத்து குறைபாடுகளை நீக்கலாம்.

அதனடிப்படையில் இன்று 1 முதல் 19 வயது வரையிலுள்ள அனைத்து குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் 20 முதல் 30 வயதிலுள்ள பெண்களுக்கும் (கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து) குடற்புழு நீக்கம் செய்யும் பொருட்டு அல்பெண்டாசோல் மாத்திரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை முழுமையாக நல்ல முறையில் செயல்படுத்தும் பொருட்டு சுகாதாரத்துறை, கல்வித்துறை, ஊட்டசசத்துதுறை, பள்ளிகல்வித்துறை, உயர்கல்வித்துறை, மாற்று திறனாளிகள்துறை. சமூக பாதுகாப்புத்துறை, சமூக நலத்துறை, நகராட்சி நிர்வாகம், மற்றும் ஊரகவளர்ச்சித்துறை இணைந்து செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அனைத்து அரசு. அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு பள்ளிகளிலும், கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு கல்லூரியில் வைத்து மதிய உணவிற்குப்பின் ஒரு மாத்திரை வழங்க ஏற்பாடு செயல்பட்டுள்ளது. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி செல்லா குழந்தைகளுக்கும், 20 வயது முதல் 30 வயது வரை உள்ள பெண்கள் (கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து), அங்கன்வாடி மையத்திலும், துணை சுகாதார நிலையத்திலும் அல்பெண்டாசோல் மாத்திரைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் மாத்திரைகள் உட்கொண்டார்கள் என்பதை ஆசிரியர்கள் உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மாத்திரையை கடித்து சுவைத்து சாப்பிடவேண்டும்.

நமது மாவட்டத்தில் 1 வயது முதல் 19 வயது வரை உள்ள 558766 அனைத்து குழந்தைகளும், 20 முதல் 30 வயது வரை உள்ள பெண்கள் 75043 (கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து). பயனடைவார்கள் 61601 எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு தேவையான மாத்திரைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இம்மாத்திரைகள் உட்கொள்வதால் எந்தவிதமான பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை. இன்று உடல் நலக்குறைவோ அல்லது மற்றகாரணங்களால் மாத்திரை உட்கொள்ளாத குழந்தைகள் மற்றும் 20 முதல் 30 வயதுள்ள பெண்களுக்கு (கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து). 17.02.2026 அன்று மாத்திரை வழங்கப்படும். எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மாத்திரை உட்கொண்டதனை உறுதிபடுத்தி அவர்களது நல்வாழ்விற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி. துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# திருவையாறில்100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு

தஞ்சாவூர் பிப்.12-

தஞ்சாவூர் அருகே திருவையாறில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.

நகராட்சித்தலைவர் கஸ்தூரி நாகராஜன் தலைமை வகித்தார், நகராட்சி துணைத் தலைவர் நாகராஜன், நகராட்சி ஆணையர் மதன்ராஜ் , நடுக்காவேரி ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர்



பிரதீப்ராஜ் முன்னிலை வகித்தனர். நகராட்சி தலைவர் கஸ்தூரி 100 கர்ப்பிணி பெண்களுக்கு வளையல் அணிவித்து சமுதாய வளைகாப்பை தொடங்கி வைத்தார்.

இதில் திமுக ஒன்றிய செயலாளர் சிவசங்கரன், நகராட்சி கவுன்சிலர்கள் ராஜ்குமார், கிருபானந்தம், சேகர், ஜெயசீலி மற்றும் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கர்ப்பிணி பெண்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை மேற்பார்வையாளர் கலா ஒருங்கிணைத்தார். குழந்தைகள் வளர்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆனந்தி வரவேற்றார் , குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெனிட்டா லூசியா மேரி நன்றி கூறினார்.



# கற்ற கல்வி தனக்கும் இச்சமூகத்திற்க்கும் பயன்பட வேண்டும் என்றும் முயற்சி செய்தால் முடியாதது இல்லை

தாம்பரம் பிப்.12-

கற்ற கல்வி தனக்கும் இச்சமூகத்திற்க்கும் பயன்பட வேண்டும் என்றும் முயற்சி செய்தால் முடியாதது இல்லை என்று தாம்பரத்தில் அடுத்த மாம்பாக்கம் சீயோன் பள்ளி ஆண்டு விழாவில் கலந்து கொண்ட தலைமை கானக வளங்காவலர் தேஜஸ்வி மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மாடம்பாக்கத்தில் உள்ள சீயோன் மெட்ரிக்குலேசன் பள்ளியில் 27வது ஆண்டு விழா சீயோன் பள்ளி குழுமம் தலைவர் டாக்டர் என்.விஜயன் தலைமையில் விமர்சையாக கொண்டாடபட்டது,

இதில் சிறப்பு விருந்தினராக தலைமை கானக வளங்காவலர் தேஜஸ்வி கலந்து கொண்டார், பின்பு பள்ளியில் சிறந்த மாணவிக்கான கல்பனா சாவ்லா விருது பண்ணிரெண்டாம் வகுப்பு கீர்த்தனாவிற்க்கும் சிறந்த மாணவற்கான ஆல்வின் விருது பண்ணிரெண்டாம் வகுப்பு மாணவன் ராகவேந்திராவிற்க்கு வழஙகபட்டது,

தொட்ர்நது 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுதேர்வில் சாதனைபடைத்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழும் வழஙகபட்டது அதே போல் பள்ளியில் நீண்ட காலமாக பணியாற்றி வந்த ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் வழஙகபட்டது.

பின்பு பேசிய தலைமை கானக வளஙகாவலர் தேஜஸ்வி, கற்ற கல்வி தனக்கும் இச்சமூகத்திற்க்கும் பயன்பட வேண்டும் என்றும், முயற்ச்சி செய்தால் முடியாதது இல்லை என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார, இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

# மயங்கி விழுந்து உயிரிழப்பு

தஞ்சாவூர், பிப்.12-

அம்மாபேட்டை புத்தூர் கீழத்தெரு பகுதியை சேர்ந்தவர் கெளரி (36) இவரது கணவர் தியாகஅருள் (44) இவர்களது உறவினர் இறந்த சாமிஅம்மாளின் 16 ம் நாள் கருமாதி திதி கொடுப்பதற்காக உறவினர்களோடு

திருவையாறு காவிரியாற்று படித்துறைக்கு வந்தபோது கெளரியின் கணவர் தியாகஅருள் மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி கீழே விழுந்தார் உடனடியாக திருவையாறு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் .இது குறித்து கெளரி கொடுத்த புகாரின்பேரில் திருவையாறு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகளிர் ஆலோசனை கூட்டம் தாம்பரம் மாநகர மகளிரணி அமைப்பாளர் ரமணிஆதிமூலம் தலைமையில் நடைபெற்றது இந்த கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் வீடு வீடாக சென்று வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரையை மகளிர் படை மேற்கொள்வது குறித்து ஆலோசனைகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, 5வதுமண்டல குழுத்தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர், எஸ்.இந்திரன், தாம்பரம் மாநகர மகளிர் தொண்டரணி அமைப்பாளர் த.பூங்கோதை, மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, கிளை கழக மகளிரணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# பெரியபாளையம் வாகன விபத்தில் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் மரணம்

திருவள்ளூர், பிப்.12-

திருவள்ளூர் மாவாட்டம் எல்லாபுரம் ஒன்றியம் பெரியபாளையம் நேதாஜி நகரை சேர்ந்த ஓய்வுபெற்ற தொடக்கப்பள்ளி தலைமையாசியர் முருகன் த/பெ. நாராயணபொருமாள் வயது 69 மனைவி நீலா பெரியபாளையம் அரசினர் மேல் நிலைப்பள்ளி ஆசிரியை என்பவரின் கணவரான முருகன் இன்று 11.02.2026 காலை 10:30 மணி அளவில் சைக்களில் வந்து கொண்டிருந்த:போதுஜி



ழி03கிகி6798 பதிவெண் கொண்ட கண்டனர் லாரி முன் சக்கரத்தில் சிக்கி விபத்துள்ளாகி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக மரணமடைந்தார் சம்பவத்தை அறிந்த பெரியபாளையம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையில் போலீசார் விரைந்து வந்து பிரேதத்தை கைப்பற்றி உடல் கூறு ஆய்வுக்காக திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விபத்து ஏற்படுத்திய கண்டெய்னர் லாரியை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விபத்து குறித்து விசாரித்து வருகின்றனர் இதனால் அப்பகுதியில் இரண்டு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161